**செய்தி வெளியீடு எண்: 571** **நாள்: 24.08.2018**

## தமிழ்நாடு பொது சார்நிலைப்பணி – முத்திரைக் கொல்லர் பதவிக்கான பகுதி திருத்தம் செய்யப்பட்ட விளம்பர அறிவிக்கை

**(சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கடலூர் மற்றும் விழுப்புரம்)**

சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் ஆட்சி எல்லையில் காலியாக உள்ள முத்திரைக் கொல்லர் பணியிடங்களை நியமன அதிகாரி/சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையரால் நிரப்பும் பொருட்டு 10.04.18 அன்று விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்டு தகுதியான நபர்கள் 10.05.18 அன்று பிற்பகல் 5.30 மணிக்குள் விண்ணப்பங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வயது உச்ச வரம்பில் சில இனங்களில் உள்ள உயர் கல்வித்தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வயது வரம்பு கீழ்கண்டவாறு (ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிக்கையில்) பகுதி திருத்தம் வெளியிடப்படுகிறது. இதனால் ஏற்கனவே 10.04.18 அன்று வெளியிடப்பட்ட விளம்பர அறிவிக்கையின் மூலம் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் தவிர்த்து ஏனைய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் 26.09.2018 பிற்பகல் 5.30–க்குள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | முத்திரைக்கொல்லர் |
| 2. | பணியின் தன்மை | எடைகள் மற்றும் அளவைகள் முத்திரையிடும் பணியில் அலுவலருக்கு உதவிடுதல் |
| 3. | சம்பளம் | ரூ.15900 – 50400 என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4. | வயது | 01.07.2017 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். |

| **இனசுழற்சி முறை** | **அதிகபட்ச வயது வரம்பு (01.07.2017 அன்றுள்ளவாறு)** |
|---|---|
| பொதுப்பிரிவு | 30 வயதுக்குள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | 32 வயதுக்குள் |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | 35 வயதுக்குள் |
| புகுமுக வகுப்பு (PUC) / மேல்நிலைப்பள்ளி (HSC) / பட்டயப்படிப்பு (Diploma) / (10+2+3) முறையான பாடத்திட்டம் மூலம் பட்டப்படிப்பு (Degree) – ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | உச்ச வயது வரம்பு இல்லை |

| | |
|---|---|
| SSLC தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் | 34 வயதுக்குள் |
| SSLC தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | 40 வயதுக்குள் |
| 40 வயதுக்குள் பணியிடம் காலியின்மை காரணமாக பணியிழந்த அரசுப்பணியாளர்களுக்கு | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக முந்தைய அரசுப்பணிபுரிந்த காலம் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு | 53 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லாதோர் (Other than SC / ST / BC) | 48 வயதுக்குள் |
| மாற்றுத்திறனாளிகள் | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |

5. மொத்த பணியிடங்கள் – 16

6. இட ஒதுக்கீடு விவரங்கள்

| GT/OC | BC | BC(M) | MBC / DNC | SC | SCA | ST | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 4 | 1 | 3 | 2 | 1 | 1 | 16 |

7. குறைந்தபட்ச கல்வித்தகுதி – பத்தாம் வகுப்பு (SSLC) வரை பள்ளியில் படித்து பள்ளி இறுதி தேர்வெழுதி, மதிப்பெண் பட்டியல் பெற்றிருத்தல் வேண்டும் (SSLC Course Completed)

8. விண்ணப்பங்கள்:-

இப்பணிக்கான விண்ணப்பங்களை சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகங்களிலும், சென்னை மற்றும் வேலூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களிலும் மற்றும் சென்னை, தொழிலாளர் கூடுதல் ஆணையர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

9. கடைசி நாள்

ஏற்கனவே 10.04.18 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கையின் மூலம் விண்ணப்பிக்காத விண்ணப்பதாரர்கள் மட்டும் தற்போது விண்ணப்பிக்கும் போது அவர்கள் விண்ணப்பங்களை தற்போது பணிசெய்யும் விவரங்களுடன், அனைத்து கல்வி சான்றிதழ்கள், சாதிச்சான்றிதழ்,

வேலைவாய்ப்பு அட்டை மற்றும் முன்னரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை மற்றும் கலப்பு திருமணம் மற்றும் பிற வகைகளில் முன்னுரிமை பெற்றோர்) பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்டியும் இரு புகைப்படங்களை தனியாகவும் இணைத்து மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்கள் சுய சான்றொப்பத்துடன் கீழ்காணும் முகவரிக்கு **26.09.2018** தேதி பிற்பகல் **5.30** மணிக்குள் கிடைக்குமாறு தபாலிலோ நேரிலோ அனுப்பப்பட வேண்டும்.

**கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,**
**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய கட்டிடம்,**
**6ம் தளம், டி.எம்.எஸ். வளாகம்,**
**தேனாம்பேட்டை, சென்னை – 6.**
**தொலைபேசி எண். 044 2432 1438**

**(காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது)**

10. மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ, சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத்தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**